மானாமதுரை நகராட்சி

மானாமதுரை நகராட்சியில் 2022 ஜீன் மாதத்திற்கான நகர்மன்ற சாதாரணக்கூட்டம் 02.06.2022 ந் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு நகர்மன்றத்தலைவர் மானாமதுரை நகராட்சி அவர்கன்தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

<table>
<tr><td>பொருள் 1</td><td>மானாமதுரை நகராட்சியில் மார்ச் மற்றும் ஏப்ரல் 2022 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>
<table>
<tr><th rowspan="2">மாதம்</th><th colspan="3">பிறப்பு</th><th colspan="3">இறப்பு</th><th colspan="3">இறந்து பிறந்தவை</th></tr>
<tr><th>ஆண்</th><th>பெண்</th><th>மொத்தம்</th><th>ஆண்</th><th>பெண்</th><th>மொத்தம்</th><th>ஆண்</th><th>பெண்</th><th>மொத்தம்</th></tr>
<tr><td>மார்ச் 2022</td><td>1</td><td>1</td><td>2</td><td>12</td><td>9</td><td>21</td><td>–</td><td>–</td><td>–</td></tr>
<tr><td>ஏப்ரல் 2022</td><td>3</td><td>1</td><td>4</td><td>11</td><td>9</td><td>20</td><td>–</td><td>–</td><td>–</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u><br>
மன்றத்தின் பார்வைக்கு</td><td>தீர்மானம் எண் 38<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள் 2</td><td>மார்ச் 2022 மாதத்திய செலவு சீட்டு எண் 748 முதல் 795 முடிய மற்றும் ஏப்ரல் 2022 மாதத்திய செலவு சீட்டு எண் 1 முதல் 41 செலவினங்கள் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
மன்றத்தின் பார்வைக்கு</td><td>தீர்மானம் எண் 39<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள் 3</td><td>மானாமதுரை நகராட்சி பொது சுகாதார வாகனங்களில் உள்ள பழுதுகளை ஆண்டுக்கு பராமரிப்பிற்கு பொதுநிதியில் ரூ 2.00 இலட்சத்தில் செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
இச்செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.</td><td>தீர்மானம் எண் 40<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>பொருள் 4</td><td>மானாமதுரை நகராட்சியானது பேரூராட்சியாக இருந்த காலத்தில் 2014–2015 முதல் 2017–2018 ம் ஆண்டு வரை நடைபெற்ற திட்டப்பணிகளில் திரு.கே.மூர்த்தி ஒப்பந்ததாரர் மேற்கொண்ட பணிகளில் பிடித்தம் செய்த கீழ்கண்டவாறு உள்ள டெண்டர் பதிவேட்டின்படி, காலம் கடந்த வைப்புத் தொகை உள்ளதால், சம்மந்தப்பட்ட ஒப்பந்தாரருக்கு அத்தொகையினை விடுவிக்க மன்றத்தின் அனுமதிக்கு.</td><td>தீர்மானம் எண் 41<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| வரிசை எண் | பக்க எண் | வரிசை எண் | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | 4 | 59 | 7750 |
| 2 | 4 | 65 | 6409 |
| 3 | 4 | 68 | 3750 |
| 4 | 5 | 89 | 1300 |
| 5 | 6 | 107 | 14079 |
| 6 | 7 | 109 | 13000 |
| 7 | 7 | 123 | 7500 |
| 8 | 8 | 136 | 7500 |
| 9 | 11 | 197 | 19750 |
| 10 | 12 | 213 | 19750 |

<u>அலுவலக குறிப்பு</u>

சம்மந்தப்பட்ட ஒப்பந்தாரருக்கு இத்தொகையினை விடுவிக்க மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்432 /2022/அ2)

**பொருள் 5**

மானாமதுரை நகராட்சிக்கு சொந்தமான இருச்சக்கர வாகனத்திற்கு 12.05.2022ந் தேதிய நடைபெற்ற பொது ஏலத்தில் கோரப்பட்டுள்ள கீழ்கண்ட விபரப்படியான கூடுதல் ஏலத் தொகை மன்றத்தின் அங்கீகரிக்கத்திற்கு.

| வ. எண் | இனங்கள் விவரம் | நடைபெற்ற ஏலத்தில் குறைவு /கூடுதல் | | | |
|---|---|---|---|---|---|
| | | குறைவாக தொகை ரூ. | | கூடுதலான தொகை ரூ | |
| (1) | (2) | (3) | | (4) | |
| 1 | இருச்சக்கர வாகனம் நிறுத்துமிடம் | திரு.ஊமத்துரை 26 வசந்த நகர் மானாமதுரை | 1270300/- | திரு.பி.விக்னேஷ் த/பெ எம்.பாலசுப்பிரமணியன் 7/526 ஜிவா நகர் மானாமதுரை | 1270700/- |
| | | திரு.ப.ஜெயராமன் 56 கிருஷ்ணராஜபுரம் மானாமதுரை | 1270500/- | | |
| | | திரு.வீ.போஸ் த/பெ வீரபாண்டி ஆவராங்காடு வெள்ளிகுறிச்சி | 1270200/- | | |
| | | திரு.பா.அதியமான் த/பெ பி.பாஸ்கரன் 91 சி மறவர் தெரு | 1270600/- | | |

தீர்மானம் எண் 42
அனுமதிக்கப்பட்டது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | மானாமதுரை | | | |
| | | திரு.ஆர்.பாலகிருஷ்ணன்<br>த/பெ ராமையா<br>கொன்னக்குளம் | 1270400/– | | |

**அலுவலககுறிப்பு**

கடைசியாக நடந்த ஏலத்தில் எடுத்த தொகையினை விட அதிகமாகவே இவ்வாண்டு ஏலம் எடுத்துள்ளார். இதனால் நகராட்சிக்கு எவ்விதமான நிதியிழப்பும் இல்லை எனவே அனுமதிக்கலாம்.(ந.க.எண்432 /2022/அ2)

| | | |
|---|---|---|
| பொருள் 6 | மானாமதுரை நகராட்சிக்கு சொந்தமான புதியபேருந்து நிலைய கட்டணக்கழிப்பறை 12.05.2022ந் தேதிய நடைபெற்ற பொது ஏலத்தில் கோரப்பட்டுள்ள கீழ்கண்ட விபரப்படியான கூடுதல் ஏலத் தொகை மன்றத்தின் அங்கீகரிக்கத்திற்கு. | தீர்மானம் எண் 43<br>அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | இனங்கள் விவரம் | நடைபெற்ற ஏலத்தில் குறைவு /கூடுதல் | | | |
|---|---|---|---|---|---|
| | | குறைவாக தொகை ரூ. | | கூடுதலான தொகை ரூ | |
| (1) | (2) | (3) | | (4) | |
| 1 | புதிய பேருந்து நிலைய கட்டணக் கழிப்பறை | திரு.மு.செல்லம்<br>த/பெ முத்தையா<br>அண்ணாசிலை பின்புறம்<br>மானாமதுரை | 220300/– | திரு.பி.முத்துராக்கு<br>முறியபஞ்சான் | ரூ.2,20,500/– |
| | | திரு.பா.அதியமான்<br>த/பெ பி.பாஸ்கரன்<br>91 சி மறவர் தெரு<br>மானாமதுரை | 220200/– | | |
| | | திரு.ம.சிவா<br>த/பெ கே.மணி<br>297 பி பர்மா காலனி<br>மானாமதுரை | 220400/– | | |

**அலுவலககுறிப்பு**

கடைசியாக நடந்த ஏலத்தில் எடுத்த தொகையினை விட அதிகமாகவே இவ்வாண்டு ஏலம் எடுத்துள்ளார். இதனால் நகராட்சிக்கு எவ்விதமான நிதியிழப்பும் இல்லை எனவே அனுமதிக்கலாம்.(ந.க.எண்432 /2022/அ2)

பொருள் 7

மானாமதுரை நகராட்சிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டண கழிப்பறை வசூல் 12.05.2022ந் தேதிய நடைபெற்ற பொது ஏலத்தில் கோரப்பட்டுள்ள கீழ்கண்ட விபரப்படியான கூடுதல் ஏலத் தொகை மன்றத்தின் அங்கீகரிக்கத்திற்கு.

| வ. எண் | இனங்கள் விவரம் | நடைபெற்ற ஏலத்தில் குறைவு /கூடுதல் குறைவாக தொகை ரூ. | நடைபெற்ற ஏலத்தில் குறைவு /கூடுதல் குறைவாக தொகை ரூ. | கூடுதலான தொகை ரூ | கூடுதலான தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | (4) | |
| 1. | மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டண கழிப்பறை வசூல் | திரு.எம்.தமிழ்ச்செல்வன் இராஜகம்பீரம் | 9000/– | திருமதி.டிபாண்டீஸ்வரி செட்டிய தெரு மானாமதுரை | 9100/– |

**<u>அலுவலககுறிப்பு</u>**

கடைசியாக நடந்த ஏலத்தில் எடுத்த தொகையினை விட அதிகமாகவே இவ்வாண்டு ஏலம் எடுத்துள்ளார். இதனால் நகராட்சிக்கு எவ்விதமான நிதியிழப்பும் இல்லை எனவே அனுமதிக்கலாம்.(ந.க.எண்432 /2022/அ2)

தீர்மானம் எண் 44 அனுமதிக்கப்பட்டது

பொருள் 8

மானாமதுரை நகராட்சிக்கு சொந்தமான மயிலன் சந்தைக்கு 12.05.2022ந் தேதிய நடைபெற்ற பொது ஏலத்தில் கோரப்பட்டுள்ள கீழ்கண்ட விபரப்படியான கூடுதல் ஏலத் தொகை மன்றத்தின் அங்கீகரிக்கத்திற்கு.

| வ. எண் | இனங்கள் விவரம் | நடைபெற்ற ஏலத்தில் குறைவு /கூடுதல் குறைவாக தொகை ரூ. | நடைபெற்ற ஏலத்தில் குறைவு /கூடுதல் குறைவாக தொகை ரூ. | கூடுதலான தொகை ரூ | கூடுதலான தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | (4) | |
| 1. | மயிலன்சந்தை | திரு.ம.ஊமத்துரை வசந்த நகர் மானாமதுரை | 480100/– | திரு.சி.சத்தியேந்திரன் 2–97 கட்டிகுளம் | 480600/– |
| | | திரு.வீ.போஸ் த/பெ வீரபாண்டியன் ஆவரங்காடு | 480200/– | | |
| | | திரு.ஆர்.சுந்தரபாண்டியன் 447 கள்ளர்வலசை செய்களத்தூர் | 480300/– | | |

தீர்மானம் எண் 45 அனுமதிக்கப்பட்டது

<table>
<tr>
<td></td>
<td>
<u>அலுவலககுறிப்பு</u><br><br>
கடைசியாக நடந்த ஏலத்தில் எடுத்த தொகையினை விட அதிகமாகவே இவ்வாண்டு ஏலம் எடுத்துள்ளார். இதனால் நகராட்சிக்கு எவ்விதமான நிதியிழப்பும் இல்லை எனவே அனுமதிக்கலாம்.(ந.க.எண்432 /2022/அ2)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் 9</td>
<td>
மானாமதுரை நகராட்சிக்கு சொந்தமான மீன்சந்தைக்கு 12.05.2022ந் தேதிய நடைபெற்ற பொது ஏலத்தில் கோரப்பட்டுள்ள கீழ்கண்ட விபரப்படியான கூடுதல் ஏலத் தொகை மன்றத்தின் அங்கீகரிக்கத்திற்கு.
<table>
<tr><td rowspan="2">வ. எண்</td><td rowspan="2">இனங்கள் விவரம்</td><td colspan="4">நடைபெற்ற ஏலத்தில் குறைவு /கூடுதல்</td></tr>
<tr><td colspan="2">குறைவாக தொகை ரூ.</td><td colspan="2">கூடுதலான தொகை ரூ</td></tr>
<tr><td>(1)</td><td>(2)</td><td colspan="2">(3)</td><td colspan="2">(4)</td></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">மீன்சந்தை</td><td>திரு.முத்துராக்கு முருகபாஞ்சான்</td><td>73200/–</td><td rowspan="2">திரு.எம்.பாலு<br>138 பழைய தபால் ஆபிஸ் தெரு<br>மானாமதுரை</td><td rowspan="2">73300/–</td></tr>
<tr><td>திருமதி.ஆர்.சிவகாமி<br>கள்ளர்வலசை<br>செய்களத்தூர்</td><td>73000/–</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு</u><br><br>
கடைசியாக நடந்த ஏலத்தில் எடுத்த தொகையினை விட அதிகமாகவே இவ்வாண்டு ஏலம் எடுத்துள்ளார். இதனால் நகராட்சிக்கு எவ்விதமான நிதியிழப்பும் இல்லை எனவே அனுமதிக்கலாம்.(ந.க.எண்432 /2022/அ2)
</td>
<td>தீர்மானம் எண் 46<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் 10</td>
<td>
மானாமதுரை நகராட்சிக்கு சொந்தமான ஆடுஅடிக்கும் தொட்டிக்கு 12.05.2022ந் தேதிய நடைபெற்ற பொது ஏலத்தில் கோரப்பட்டுள்ள கீழ்கண்ட விபரப்படியான கூடுதல் ஏலத் தொகை மன்றத்தின் அங்கீகரிக்கத்திற்கு.
<table>
<tr><td rowspan="2">வ. எண்</td><td rowspan="2">இனங்கள் விவரம்</td><td colspan="4">நடைபெற்ற ஏலத்தில் குறைவு /கூடுதல்</td></tr>
<tr><td colspan="2">குறைவாக தொகை ரூ.</td><td colspan="2">கூடுதலான தொகை ரூ</td></tr>
<tr><td>(1)</td><td>(2)</td><td colspan="2">(3)</td><td colspan="2">(4)</td></tr>
<tr><td>1</td><td>ஆடு அடிக்கும் தொட்டி</td><td>திரு.சி.சத்தியேந்திரன்<br>56/4 வசந்த நகர்<br>மானாமதுரை</td><td>56500/–</td><td>திரு.ஆர்.சுந்தரபாண்டியன்<br>447,கள்ளர்வலசை<br>செய்களத்தூர்<br>மானாமதுரை</td><td>56600/–</td></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண் 47<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<u>அலுவலககுறிப்பு</u>

கடைசியாக நடந்த ஏலத்தில் எடுத்த தொகையினை விட அதிகமாகவே இவ்வாண்டு ஏலம் எடுத்துள்ளார். இதனால் நகராட்சிக்கு எவ்விதமான நிதியிழப்பும் இல்லை எனவே அனுமதிக்கலாம்.(ந.க.எண்432 /2022/அ2)

---

**பொருள் 11**

மானாமதுரை நகராட்சிக்கு சொந்தமான ஐடிஎஸ்எம்டி கடை எண் 2 க்கு 12.05.2022ந் தேதிய நடைபெற்ற பொது ஏலத்தில் கோரப்பட்டுள்ள கீழ்கண்ட விபரப்படியான கூடுதல் ஏலத் தொகை மன்றத்தின் அங்கீகரிக்கத்திற்கு.

| வ. எண் | இனங்கள் விவரம் | நடைபெற்ற ஏலத்தில் குறைவு /கூடுதல் | | | |
|---|---|---|---|---|---|
| | | குறைவாக தொகை ரூ. | | கூடுதலான தொகை ரூ | |
| (1) | (2) | (3) | | (4) | |
| 1 | ஐடிஎஸ்எம்டி கடை எண்2 | திரு.சி.காளியப்பன் இராஜேந்திர நகர் சிப்காட் மானாமதுரை | 3050/– | திரு.ம.முனீஸ்வரன் 1/10 எ கணபதி நகர் காட்டு உடைகுளம் மானாமதுரை | 3125/– |
| | | திரு.கௌதம் முனியசாமி 27/1 வடக்குபுதுத்தெரு மானாமதுரை | 3025/– | | |

<u>அலுவலககுறிப்பு</u>

ஏற்கனவே அதிக வாடகைக்கு ஏலம் எடுத்தவர்கள் நகராட்சி வசம் ஒப்படைத்து கடந்த இரண்டு ஆண்டுகளாக காலியாகவே உள்ளது. மேலும் ஐடிஎஸ்எம்டி கடை வாடகை அதிகபட்சமாக ரூ 2600/– க்கு விடப்பட்டுள்ளது. (காப்புத் தொகை ரூ 20000/–) மேற்கண்ட கடை ரூ 3125 + ஜிஎஸ்டிக்கு எடுத்துள்ளார். காப்புத் தொகை வசூலிக்கப்பட்ட ரூ 100000/– ஐ வங்கியில் வைப்பு தொகை வைக்கும் பொழுது நகராட்சிக்கு மாதம் சுமார் ரூ 500/– வட்டியாக கிடைக்கும் எனவே நகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் இல்லை. எனவே அனுமதிக்கலாம்.(ந.க.எண்432 /2022/அ2)

தீர்மானம் எண் 48
அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் 12**

மானாமதுரை நகராட்சிக்கு சொந்தமான ஐடிஎஸ்எம்டி கடை எண் 3 க்கு 12.05.2022ந் தேதிய நடைபெற்ற பொது ஏலத்தில் கோரப்பட்டுள்ள கீழ்கண்ட விபரப்படியான கூடுதல் ஏலத் தொகை மன்றத்தின் அங்கீகரிக்கத்திற்கு.

தீர்மானம் எண் 49
அனுமதிக்கப்பட்டது

| வ. எண் | இனங்கள் விவரம் | நடைபெற்ற ஏலத்தில் குறைவு /கூடுதல் | | | |
|---|---|---|---|---|---|
| | | குறைவாக தொகை ரூ. | | கூடுதலான தொகை ரூ | |
| (1) | (2) | (3) | | (4) | |
| 1 | ஐடிஎஸ்எம்டி கடை எண்3 | திரு.கௌதம் முனியசாமி வடக்குபுதுத் தெரு மானாமதுரை | 3050/– | திரு.எஸ்.கர்ணன் த/பெ சீமைச்சாமி ஏ.விளாக்குளம் | 3100/– |

**<u>அலுவலககுறிப்பு</u>**

ஏற்கனவே அதிக வாடகைக்கு ஏலம் எடுத்தவர்கள் நகராட்சி வசம் ஒப்படைத்து கடந்த இரண்டு ஆண்டுகளாக காலியாகவே உள்ளது. மேலும் ஐடிஎஸ்எம்டி கடை வாடகை அதிகபட்சமாக ரூ 2600/– க்கு விடப்பட்டுள்ளது. (காப்புத் தொகை ரூ 20000/–) மேற்கண்ட கடை ரூ 3100 + ஜிஎஸ்டிக்கு எடுத்துள்ளார். காப்புத் தொகை வசூலிக்கப்பட்ட ரூ 100000/– ஐ வங்கியில் வைப்பு தொகை வைக்கும் பொழுது நகராட்சிக்கு மாதம் சுமார் ரூ 500/– வட்டியாக கிடைக்கும் எனவே நகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் இல்லை. எனவே அனுமதிக்கலாம்.(ந.க.எண்432 /2022/அ2)

---

பொருள் 13

மானாமதுரை நகராட்சிக்கு சொந்தமான ஐடிஎஸ்எம்டி கடை எண் 4 க்கு 12.05.2022ந் தேதிய நடைபெற்ற பொது ஏலத்தில் கோரப்பட்டுள்ள கீழ்கண்ட விபரப்படியான கூடுதல் ஏலத் தொகை மன்றத்தின் அங்கீகரிக்கத்திற்கு.

| வ. எண் | இனங்கள் விவரம் | நடைபெற்ற ஏலத்தில் குறைவு /கூடுதல் | | | |
|---|---|---|---|---|---|
| | | குறைவாக தொகை ரூ. | | கூடுதலான தொகை ரூ | |
| (1) | (2) | (3) | | (4) | |
| 1 | ஐடிஎஸ்எம்டி கடை எண்4 | திரு.சி.காளியப்பன் ராஜேந்திர நகர் சிப்காட் மானாமதுரை | 3125/– | திரு.வி.பாஸ்கரன் அழகர்கோவில் தெரு மானாமதுரை | 3150/– |

**<u>அலுவலககுறிப்பு</u>**

ஏற்கனவே அதிக வாடகைக்கு ஏலம் எடுத்தவர்கள் நகராட்சி வசம் ஒப்படைத்து கடந்த இரண்டு ஆண்டுகளாக காலியாகவே உள்ளது. மேலும் ஐடிஎஸ்எம்டி கடை வாடகை அதிகபட்சமாக ரூ 2600/– க்கு விடப்பட்டுள்ளது. (காப்புத் தொகை ரூ 20000/–) மேற்கண்ட கடை ரூ 3150 + ஜிஎஸ்டிக்கு எடுத்துள்ளார். காப்புத் தொகை வசூலிக்கப்பட்ட ரூ 100000/– ஐ வங்கியில் வைப்பு தொகை வைக்கும் பொழுது நகராட்சிக்கு மாதம் சுமார் ரூ 500/– வட்டியாக கிடைக்கும் எனவே நகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் இல்லை. எனவே அனுமதிக்கலாம்.(ந.க.எண்432 /2022/அ2

தீர்மானம் எண் 50
அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| பொருள் 14 | மானாமதுரை நகராட்சிக்கு சொந்தமான ஐடிஎஸ்எம்டி கடை எண் 5 க்கு 12.05.2022ந் தேதிய நடைபெற்ற பொது ஏலத்தில் கோரப்பட்டுள்ள கீழ்கண்ட விபரப்படியான கூடுதல் ஏலத் தொகை மன்றத்தின் அங்கீகரிக்கத்திற்கு. | தீர்மானம் எண் 51 அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | இனங்கள் விவரம் | நடைபெற்ற ஏலத்தில் குறைவு /கூடுதல் | | | |
|---|---|---|---|---|---|
| | | குறைவாக தொகை ரூ. | | கூடுதலான தொகை ரூ | |
| (1) | (2) | (3) | | (4) | |
| 1 | ஐடிஎஸ்எம்டி கடை எண் 5 | திரு.சி.காளியப்பன் த/பெ சின்னச்சாமி இராஜேந்திர நகர் சிப்காட் மானாமதுரை | 3125/– | திரு.வே.சுந்தர் 167/டி பி எதிர்புறம் மானாமதுரை | 3175/– |
| | | திரு.வி.சுப்பிரமணியன் ஸ்ரீ ராம் நகர் மானாமதுரை | 3150/– | | |

<u>அலுவலககுறிப்பு</u>

ஏற்கனவே அதிக வாடகைக்கு ஏலம் எடுத்தவர்கள் நகராட்சி வசம் ஒப்படைத்து கடந்த இரண்டு ஆண்டுகளாக காலியாகவே உள்ளது. மேலும் ஐடிஎஸ்எம்டி கடை வாடகை அதிகபட்சமாக ரூ 2600/– க்கு விடப்படுள்ளது. (காப்புத் தொகை ரூ 20000/–) மேற்கண்ட கடை ரூ 3175 + ஜிஎஸ்டிக்கு எடுத்துள்ளார். காப்புத் தொகை வசூலிக்கப்பட்ட ரூ 100000/– ஐ வங்கியில் வைப்பு தொகை வைக்கும் பொழுது நகராட்சிக்கு மாதம் சுமார் ரூ 500/– வட்டியாக கிடைக்கும் எனவே நகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் இல்லை. எனவே அனுமதிக்கலாம்.(ந.க.எண்432 /2022/அ2)

| | | |
|---|---|---|
| பொருள் 15 | மானாமதுரை நகராட்சிக்கு சொந்தமான ஐயூடிபி கடை எண் 14 ஏ க்கு 12.05.2022ந் தேதிய நடைபெற்ற பொது ஏலத்தில் கோரப்பட்டுள்ள கீழ்கண்ட விபரப்படியான கூடுதல் ஏலத் தொகை மன்றத்தின் அங்கீகரிக்கத்திற்கு. | தீர்மானம் எண் 52 அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | இனங்கள் விவரம் | நடைபெற்ற ஏலத்தில் குறைவு /கூடுதல் | | | |
|---|---|---|---|---|---|
| | | குறைவாக தொகை ரூ. | | கூடுதலான தொகை ரூ | |
| (1) | (2) | (3) | | (4) | |
| 1 | ஐயூடிபி கடை | திரு.சே.சுப்புராமன் த/பெ சேதுபதி | 3050/– | திரு.கே.மூர்த்தி த/பெ கருப்புச்சாமி | 3100/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எண் 14 ஏ | மாரியம்மன் கோவில் தெரு<br>மானாமதுரை | | 52 பழைய காளையார் கோவில் ரஸ்தா<br>மானாமதுரை | |

**அலுவலககுறிப்பு**

ஐயூடிபி கடை எண் 14 ஏ க்கு 23.05.2018 ந் தேதியன்று பொது ஏலத்தில் சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டதால் பொதுஏலமானது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளாக மேற்கண்ட ஐயூடிபி கடை எண் 14 ஏ காலியாக உள்ளது. எனவே மேற்கண்ட ஏலத்தினை மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்432 /2022/அ2)

**பொருள் 16**

மானாமதுரை நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய நுழைவு கட்டணம் வசூலுக்கு 12.05.2022ந் தேதிய நடைபெற்ற பொது ஏலத்தில் கோரப்பட்டுள்ள கீழ்கண்ட விபரப்படியான கூடுதல் ஏலத் தொகை மன்றத்தின் அங்கீகரிக்கத்திற்கு.

| வ. எண் | இனங்கள் விவரம் | நடைபெற்ற ஏலத்தில் குறைவு /கூடுதல் | | | |
|---|---|---|---|---|---|
| | | குறைவாக தொகை ரூ. | | கூடுதலான தொகை ரூ | |
| (1) | (2) | (3) | | (4) | |
| 14 | பேருந்து நிலைய நுழைவு கட்டணம் வசூல் | திரு.ஆர்.வசந்த அழகன் திருப்பாச்சேத்தி | 472000/– | திரு.பி.மலைச்சாமி த/பெ பஞ்சை நடுத்தெரு கிழப்பசலை போஸ்ட் மானாமதுரை | 473000/– |
| | | திரு.ஆர்.சோணைமுத்து திருப்பாச்சேத்தி | 471000/– | | |

**அலுவலககுறிப்பு**

நகராட்சியின் மூலம் வசூல் செய்ததால் சுமார் ரூ 770000/– வசூல் செய்யும் நகராட்சி பணியாளருக்கு ஊதியம் மாதம் ரூ 20000/– ஆகும். 12 மாதங்களுக்கு ரூ 240000/– செலவாகும். எனவே மேற்கண்ட ஏலத்தினை அனுமதிக்கலாம்.(ந.க.எண்432 /2022/அ2)

தீர்மானம் எண் 53 அனுமதிக்கப்பட்டது

**பொருள் 17**

மானாமதுரை நகராட்சி வார்டு எண் 01 முதல் 27 வார்டுகளில் உள்ள பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யவும், இராஜகம்பீரம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பிரதான குழாய்கள் சரிசெய்வதற்கு, 2022–2023 நடப்பு ஒராண்டுக்கு பராமரிப்பு செய்வதற்கான செலவினத்திற்கான மதிப்பீடு தொகை ரூ10.00 இலட்சத்தில் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.

தீர்மானம் எண் 54 அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு</u>**<br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் பணி முக்கியமானதாக உள்ளதால், பொதுமக்கள் நலன் கருதி பொதுநிதியில் செலவு செய்திட அனுமதி வழங்கலாம். (ந.க.எண்680 /2022/அ1) | |
| பொருள் 18 | மானாமதுரை நகராட்சி வார்டு எண் 15 முதல் 27 வார்டுகளில் உள்ள சின்டெக்ஸ் டேங்க் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யவும், இராஜகம்பீரம் தலைமை நீரேற்று நிலையத்தில் இயங்கி வரும் மோட்டார் பம்பு செட்டுகளையும் பழுது நீக்கம் செய்வதற்கு, 2022–2023 நடப்பு ஒராண்டுக்கு பராமரிப்பு செய்வதற்கான செலவினத்திற்கான மதிப்பீடு தொகை ரூ6.00 இலட்சத்தில் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் பணி முக்கியமானதாக உள்ளதால், பொதுமக்கள் நலன் கருதி பொதுநிதியில் செலவு செய்திட அனுமதி வழங்கலாம். (ந.க.எண்679 /2022/அ1) | தீர்மானம் எண் 55<br>அனுமதிக்கப்பட்டது |
| பொருள் 19 | மானாமதுரை நகராட்சி வார்டு எண் 01 முதல் 14 வார்டுகளில் உள்ள சின்டெக்ஸ் டேங்க் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யவும், இராஜகம்பீரம் தலைமை நீரேற்று நிலையத்தில் இயங்கி வரும் மோட்டார் பம்பு செட்டுகளையும் பழுது நீக்கம் செய்வதற்கு, 2022–2023 நடப்பு ஒராண்டுக்கு பராமரிப்பு செய்வதற்கான செலவினத்திற்கான மதிப்பீடு தொகை ரூ6.00 இலட்சத்தில் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் பணி முக்கியமானதாக உள்ளதால், பொதுமக்கள் நலன் கருதி பொதுநிதியில் செலவு செய்திட அனுமதி வழங்கலாம். (ந.க.எண்678 /2022/அ1) | தீர்மானம் எண்56<br>அனுமதிக்கப்பட்டது |
| பொருள் 20 | மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 1.140 கிலோ மீட்டருக்கு கேபிள் பதிக்க ரிலையன்ஸ் ஜியோ சென்னை நிறுவனத்திடமிருந்து கடிதம் வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து உரிய மதிப்பீட்டு கட்டணம் பெறப்பட்டு, கேபிள் பதிக்க அனுமதி வழங்கலாம் (ந.க.எண்430/2022/அ1) | தீர்மானம் எண் 57<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>பொருள் 21</td>
<td>மானாமதுரை நகராட்சி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மற்றும் சொத்து வரி / காலிமனைவரி பொது சீராய்வு அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தற்கான தொகையினை கீழ்கண்டவாறு உள்ள நிறுவனங்களுக்கு இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு மன்றத்தின் அனுமதிக்கு.<br>
<table>
<tr><th>வ எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை ரூ</th></tr>
<tr><td>1</td><td>Trinity Printers and Publishers Limited</td><td>30240/–</td></tr>
<tr><td>2</td><td>Kal Publication (P) Ltd</td><td>12915/–</td></tr>
<tr><td>3</td><td>Kal Publication (P) Ltd</td><td>12915/–</td></tr>
<tr><td>4</td><td>Madurai Mani</td><td>29030/–</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u><br>
மேற்கண்ட தொகையினை இந்நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.(ந.க.எண்440 /2022/அ1)</td>
<td>தீர்மானம் எண் 58<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் 22</td>
<td>மானாமதுரை நகராட்சி அலுவலத்தில் 2015ம் ஆண்டு புதியதாக கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டது. சுமார் 8 வருடங்களுக்கு மேலாகிவிட்டதால், அக்கேமராக்கள் மற்றும் டிவிஆர் பழுதடைந்துள்ளது. எனவே புதியதாக கண்காணிப்பு கேமராக்கள், எல்இடி திரை மற்றும் டிவிஆர் பொருத்தியதற்கான சுமார் தொகை ரூ 58000/– இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
மேற்கண்ட தொகையினை இந்நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.(ந.க.எண்673 /2022/அ1)</td>
<td>தீர்மானம் எண் 59<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் 23</td>
<td>மானாமதுரை நகராட்சிக்குண்டான பொது சுகாதார வாகனத்திற்கு சாலைவரி செலுத்திடவும், பொது சுகாதார பிரிவில் உள்ள வாகனங்களில் உள்ள பழுதுகளை சரிசெய்திடவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
மேற்கண்ட தொகையினை இந்நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.</td>
<td>தீர்மானம் எண் 60<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் 24</td>
<td>மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து அறுவை சிகிச்சை செய்யவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
இந்நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.(ந.க.எண்643 /2022/அ1)</td>
<td>தீர்மானம் எண் 61<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் 25 | மானாமதுரை நகராட்சியில் தற்போது உள்ள DBC பணியாளர்கள் 10 நபர்கள் ஆவார். நடப்பாண்டு தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழைகாலம் தொடங்க உள்ளதால், 300 வீட்டுக்கு ஒரு DBC பணியாளர் வீதம் DBC பணியாளர்கள் தேவைப்படுவதால் நகராட்சியில் உள்ள 27 வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு மேலும் 10 நபர்கள் வெளிகௌணர்வு நடைமுறையில் தற்காலிக DBC பணியாளர்களை நியமனம் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>இந்நகராட்சிக்கு கூடுதலாக 10 நபர்கள் வெளிகௌணர்வு நடைமுறையில் தற்காலிக DBC பணியாளர்களை நியமனம் செய்து கொள்ள அனுமதி வழங்கலாம்.(ந.க.எண்644 /2022/அ1) | தீர்மானம் எண் 62 அனுமதிக்கப்பட்டது |
| பொருள் 26 | மானாமதுரை நகராட்சி அலுவலகத்தில் அன்றாட அலுவலக நடவடிக்கைகள் கணிணி மயமாக்கப்பட்டு உள்ளதால், இளநிலை உதவியாளர், வருவாய் ஆய்வாளர், நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் நகராட்சி ஆணையாளர் ஆகியோருக்கு புதியதாக நான்கு கணிணிகள், மடிக்கணிணி மற்றும் பிரிண்டர் வாங்குவதற்கு ஏற்கனவே மன்ற தீர்மானம் எண் 32 நாள் 31.03.2022 ந் படி தொகை ரூ 285000/—க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் வரிவசூல் பணிக்கென கூடுதலாக ஒரு பிரிண்டர் வாங்கப்பட்டுள்ளது. மேலும் கணிணிகள்,மடிக்கணிணி மற்றும் பிரிண்டர்களுக்கு ஜிஎஸ்டி வரி கணக்கிடப்படவில்லை எனவே கூடுதலான தொகை 136065/— ஐ இந்நகாட்சியின் பொதுநிதியிலிருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>புதியதாக நான்கு கணிணிகள், மடிக்கணிணி மற்றும் பிரிண்டர் வாங்குவதற்கு ஏற்கனவே மன்ற தீர்மானம் எண் 32 நாள் 31.03.2022 ந் படி தொகை ரூ 285000/— க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் வரிவசூல் பணிக்கென கூடுதலாக ஒரு பிரிண்டர் வாங்கப்பட்டுள்ளது. மேலும் கணிணிகள்,மடிக்கணிணி மற்றும் பிரிண்டர்களுக்கு ஜிஎஸ்டி வரி கணக்கிடப்படவில்லை எனவே கூடுதலான தொகை 136065/— யும் இந்நகாட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.(ந.க.எண்467 /2022/அ1) | தீர்மானம் எண் 63 அனுமதிக்கப்பட்டது |
| பொருள் 27 | மானாமதுரை நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள பிரிண்டர்களில் உள்ள டோனர்கள் காலியாகிவிட்டதால், புதியதாக 15 எண்ணம் டோனர்கள் வாங்கியதற்கான தொகை ரூ 14250/—ஐ இந்நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>இந்நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.(ந.க.எண்.03/2022/அ1) | தீர்மானம் எண் 64 அனுமதிக்கப்பட்டது |
| பொருள் 28 | அரசாணை (நிலை) எண் 52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாகம் இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 40032/2012/ஆர்1 நாள் 01.04.2022 ன்படி சொத்துவரி/ காலிமனை வரி பொது சீராய்வு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அதற்கான சொத்துவரி சீராய்வு அறிவிப்பினை மாவட்ட அரசிதழில் வெயிடுவதற்கான கட்டணம் தொகை ரூ 10500/— ஐ இந்நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவு செய்ததற்கு மன்றத்தின் பின்னேற்புக்கு. | தீர்மானம் எண் 65 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | <u>அலுவலக குறிப்பு</u><br>அவசர அவசியம் கருதி இந்நகராட்சியின் பொதுநிதியிலிருந்து ரூ 10500/— வழங்கியதற்கு பின்னேற்பு வழங்கலாம்.(ந.க.எண்440 /2022/அ1) | |
| பொருள் 29 | கடந்த 12.05.2022 ந் தேதியன்று நடந்த பொது ஏலத்தில் கலந்து கொண்டு ஏலம் எடுத்த குத்தகைதாரர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணி ஆணை வழங்க மன்றத்தின் பார்வைக்கு.<br><br>1. முதல் ஆண்டில் கோரப்பட்ட குத்தகைத் தொகையின் அடிப்படையில் 5% உயர்த்தி அத்தொகையே இரண்டாம் ஆண்டிற்கான குத்தகை தொகையாக கருதப்படும்.<br>2. இரண்டாம் ஆண்டு குத்தகைத் தொகையின் அடிப்படையில் 5% உயர்த்தி அத்தொகையே மூன்றாம் ஆண்டிற்கான குத்தகைத் தொகையாக கருதப்படும்.<br>3. முதல் ஆண்டு குத்தகைத் தொகையை உறுதி செய்து அறிவிப்பு அனுப்பப்பட்ட 3 நாட்களுக்குள் குத்தகை தொகை முழுவதும் செலுத்திய பின்னரே குத்தகை ஒப்படைக்கப்படும்.<br>4. இதே போல் இரண்டாம் ஆண்டு குத்தகைத் தொகைகளின் மொத்த தொகையை 2023ம் ஆண்டு மார்ச் 15ம் தேதிக்குள்ளும் மூன்றாம் ஆண்டின் குத்தகை தொகையினை 2024ம் ஆண்டு மார்ச் 15ம் தேதிக்குள்ளும் செலுத்திய பின்னரே குத்தகை உரிமம் அனுபவிக்க அனுமதிக்கப்படும். குறிப்பிட்ட கால அளவிற்குள் செலுத்தப்படவில்லையென்றால் குத்தகை ரத்து செய்யப்பட்டு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்படும். இதனால் ஏற்படும் சகல இழப்பிற்கும் குத்தகைதாரர்களையே பொறுப்பாக்கி இழப்பினை ஈடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.<br>5. பொது வேலை நிறுத்தம், முழு ஊரடங்கு, கலகம், தீ விபத்து அல்லது மனித சக்திக்கு மீறிய இதரக் காரணங்களால் குத்தகையினை தற்காலிகமாக மூடும்படி நேர்ந்தால் அதற்காக யாதொரு நஷ்ட ஈடு உரிமக் கழிவு கோர உரிமைதாரருக்கு உரிமை கிடையாது. நஷ்ட ஈடும் வழங்கப்பட மாட்டாது.<br>6. எதிர்பார்த்த வருமானம் கிடைக்கவில்லை என்றாலும் அல்லது வேறு எந்தக் காரணங்களுக்காவும் லைசென்ஸ் தொகையை குறைத்து தரவேண்டும் என்று கேட்க உரிமைதாரருக்கு அல்லது குத்தகைதாரருக்கு ஒரு போதும் உரிமை இல்லை. மேலும் குத்தகைதாரர் அல்லது உரிமையாணைதாரருக்கு ஏற்படும் இழப்பிற்கும் தவறுகளுக்கும் நகர்மன்றத்தை பொறுப்பாக்க அவர்களுக்கு உரிமை இல்லை.<br>7. நகராட்சி மன்றத்தினுடைய எழுத்து மூலமான முன் அனுமதியை பெறாமல் குத்தகைக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கும் நகர்மன்றத்தின் சொத்து வகையறாக்களை உரிமதாரர் சேதப்படுத்தவோ இவைகளில் மாறுதல் செய்யவோ அல்லது கூடுதல் கட்டிடங்கள் கட்டவோ கூடாது.<br>8. உரிமைதாரர் இறந்து போனாலும் கடனாளியாகி போனாலும், புத்திசுவாதீனம் இல்லாமல் போனாலும் அல்லது வேறு காரணங்களினால் உரிமத்தினை நிறைவேற்ற இயலாதவராகிவிட்டாலும் அவருடைய சந்ததியினர் அவருடைய கருத்தை நிறைவேற்றுபவர், அவருடைய சொத்தை பராமரிப்பவர் அல்லது அவருடைய சொத்தை பெறுபவர்கள் உரிமைதாரர் நடந்து கொள்ள வேண்டிய விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டவர் ஆவார்.<br>9. உரிமைதாரர் இறந்தாலும் அல்லது சித்தசுவாதீனம் இழந்துவிட்டாலும் அல்லது உரிமம் நடத்த முடியாதவராய் போனாலும், மேற்படி ஒப்பந்தத்தை மேற்படி உரிமைதாரரின் உரிமை பெற்றவர்கள், சொத்துக்குரியவர்கள் கால்வழியினர்கள், பிற வழியில் உரிமை பெற்றவர்கள் இவர்களுக்கும் உரிமை மாற்றம் | தீர்மானம் எண்66<br>அனுமதிக்கப்பட்டது |

செய்ய விண்ணப்பம் வரப்பெற்றால் மன்றம் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதியுடன் உரிமை மாற்றம் செய்ய பரிசீலிக்கப்படும். அல்லது உரிமத்தை ரத்துச் செய்து மறு ஏலம் விடப்படும். இதில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் முடிவே இறுதியானது.

10 நகர்மன்றத்தின் அனுமதியின்றி எந்த உரிமைதாரரும் அவர்களுடைய குத்தகையையோ, யாதொரு பாகத்தையாவது மற்றவர்களுக்கு மாற்றவோ, உள் குத்தகைக்கு விடவோ, வாடகைக்கு விடவோ கூடாது. அப்படி மீறி செய்பவர்களின் உரிமம் முன் அறிவிப்பு ஏதுமின்றி உடனடியாக ரத்துச் செய்து மறு ஏலம் விடப்படும். உரிமைதாரரின் வைப்புத் தொகை காப்பீட்டுத் தொகை முழுவதும் பறிமுதல் செய்யப்படும்.

11. உரிமம் ரத்துச் செய்ய நேர்ந்து மறு ஏலம் விடும்போதோ அல்லது உரிமம் காலம் முடிந்தாலோ உரிமைதாரர் குத்தகை இனங்களை இதர உரிமைகளையும், நகராட்சி வருவாய் ஆய்வர் முன்னிலையில் காலி செய்து ஒப்படைக்க வேண்டும். மேலும் நகராட்சிக்கு சேரவேண்டிய தொகை வரப் பெறத்தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

12. எந்த பொதுக்கட்டுப்பாடுகளின்படியாவது அல்லது தனிக்கட்டுப்பாடுகளின்படியாவது நடக்கத் தவறினால் ஒவ்வொரு குற்றத்திற்கும் ரூ.500/–க்கு மேற்படாமல் லைசென்ஸ்தாரருக்கு அபராதம் விதிக்கவும் குறிப்பிட்ட நாளுக்குள் கட்ட வேண்டிய தொகைகளை கட்டாவிட்டால் அந்த நாளிலிருந்து தொகை கட்டும் நாள் வரை அபராதம் விதித்து பொறுப்புத் தொகையிலிருந்து பிடித்துக் கொள்ளவும் உரிமத்தை ரத்துச் செய்யவும் மறு ஏலம் விடவும் ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு. அதனால் ஏற்படும் இழப்பிற்கு உரிமதாரர்களே பொறுப்பு ஆவார்கள். அப்படி செய்தால் உண்டாகும் ஆதாயத்தில் அவர்களுக்கு பாத்தியம் இல்லை.

13. உரிமைதாரர் குத்தகை கட்டுப்பாடுகளின்படியாவது சட்டம் முதலியவற்றின்படியாவது அல்லது இந்த அறிவிப்பில் கண்டபடி எந்த பொது அல்லது தனிக்கட்டுப்பாடுகளின் படியாவது நடக்கத் தவறினால் அவர்கள் குற்றச்சாட்டிற்குள்ளாவர்கள்.

14. குத்தகை திட்டங்களைப் பற்றி உடன்படிக்கையில் காணும் யாதொரு சொல் அல்லது சொற்றொடரை குறித்து ஆணையர் எடுக்கும் முடிவே முடிவானதாகும். அதன்படி லைசென்ஸ்தாரர் நடக்க வேண்டும்.

15. உரிமைதாரர் அல்லது குத்தகைதாரர் குத்தகை இனங்களுக்குரிய இடத்தையும் கட்டிட வகையறாக்களையும் தன் சொந்த செலவில் உரிமையாணைக் காலம் முழுவதும் துப்புரவாகவும், சுகாதார முறைப்படியும் வைத்துக் கொள்ள வேண்டும்.

16. உரிமைதாரர் காலம் முடிந்தவுடன் லைசென்ஸ்தாரர்கள் அவர்களுக்கு விடப்பட்ட இனத்தை எவ்வித சேதமும் இன்றி நல்ல நிலையில் கட்டிடம் வகையறாவுடன் வருவாய் ஆய்வரிடம் ஒப்படைக்க வேண்டும்.

17. உரிமைதாரர் கட்டணம் வசூல் செய்யும்போது ஒவ்வொரு ரசீதும் லைசென்ஸ்தாரர் அல்லது அவருடைய அதிகாரம் பெற்றவர் தேதியுடன் கையெழுத்திட்டு அச்சிடப்பட்ட ரசீது கொடுத்து விதிகளில் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தை வசூல் செய்ய வேண்டும். ரசீதுகளின் அடிக்கட்டைகளையும் கணக்குகளையும் பத்திரமாக வைத்திருக்க வேண்டும். அச்சிடப்பட்ட ரசீதுப் புத்தகங்களை முன்னதாகவே நகராட்சி அலுவலகத்திற்கு கொண்டுவந்து அலுவலக முத்திரையிட்டுக் கொள்ள வேண்டும். நகராட்சியின் முத்திரையிடப்படாத ரசீதுகளை உபயோகிக்கக் கூடாது. ரசீதுப் புத்தகங்களை தனது சொந்தச் செலவிலே அச்சடித்துக் கொள்ள வேண்டும்.

18. மன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டண விகிதங்களைக் காட்டும் அறிவிப்பு பலகை ஒன்றை நன்கு தெரியும்படியான இடத்தில் உரிமையாணைதாருடைய சொந்தச் செலவில் வைத்து உரிமையாணைக் காலம் முழுவதும் பராமரித்து வரவேண்டும். அவ்வாறு அறிவிப்பு பலகை வைக்க உரிமைதாரர்கள் தவறினால் நகராட்சியே அறிவிப்பு பலகையை பொருத்தி அதற்கான செலவுத் தொகையை உரிமதாரரிடமிருந்து வசூலித்துக் கொள்ள உரிமை உண்டு.

19. நகராட்சி பேருந்து நிலையத்தில் பூ விற்பனை மற்றும் இதர திண்பண்டங்கள் விற்பனை செய்யும் உரிமத்தினை மாவட்ட ஆட்சியர் மற்றும் அரசு உத்தரவுக்கு இணங்க இடையில் குத்தகை உரிமம் ரத்து செய்யப்பட்டால் மீண்டும் பின் உரிமம் கோரக்கூடாது.

20. ஆண்டு குத்தகை இனங்களில் தினசரி கட்டணம் வசூலிக்கும் உரிமை பெற்றவர்கள் தினசரி கட்டணங்களை நடுஇரவு முதல் அடுத்த நாள் நடுஇரவு வரையிலான 24 மணி நேரத்தை ஒரு நாள் என்பதைக் கடைபிடித்து வசூலித்து வரவேண்டும்.

21. ஏலம் போட்டி காரணமாக கூடுதல் தொகைக்கு ஏலம் எடுத்தால், எடுத்த காரணம் காட்டி நிர்ணயிக்கப்பட்ட கட்டண விகிதங்களைவிட கூடுதலாக வசூல் செய்யக் கூடாது. அவ்வாறு வசூலிப்பது கண்டுபிடிக்கப்பட்டால் முன் அறிவிப்புமின்றி உரிமம் ரத்து செய்து பொறுப்புத் தொகை பறிமுதல் செய்து மறுஏலம் விடப்படும்.

22. நகராட்சி கடை மற்றும் கட்டிடங்களில் எளிதில் தீப்பிடிக்கக் கூடியதும் வெடிமருந்து பொருட்களும் விற்பனை செய்யக்கூடாது. மீறி நடந்து அதனால் நகராட்சி சொத்துக்களுக்கோ பொது, தனியார் சொத்துக்களுக்கோ சேதம் ஏற்பட்டால் அதற்கு குத்தகைதாரரே முழுப்பொறுப்பு ஆக்கப்படுவார்.

23. நகராட்சியில் குத்தகை எடுத்த கடைகாரரே கடையினை நடத்த வேண்டும். உள் வாடகைக்கு வேறு நபருக்கு விடக்கூடாது மீறினால் கடை உரிமம் ரத்து செய்யப்படும்.

24. நகராட்சி கட்டிடங்களில் சட்டத்திற்கு உட்பட்ட தொழில் மட்டுமே செய்ய வேண்டும். சட்டத்திற்கு புறம்பான தொழில் செய்வதாக காவல் துறையிலிருந்து அறிக்கை வரப்பெற்றால் மேற்படி தொழிலை தொடர்ந்து செய்தால் முன் அறிவிப்பு இன்றி குத்தகை உரிமை ரத்துச் செய்யப்பட்டு மறு ஏலம் விடப்படும். மறு ஏலத்தினால் நகராட்சிக்கு ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் சம்பந்தப்பட்ட குத்தகைதாரரே முழுப்பொறுப்பு ஆவார். நகராட்சி குத்தகை கடைகள் வாடகை ஒவ்வொரு மாதமும் ஆரம்பிக்கும் முதல் ஐந்து தினங்களுக்குள் அதற்குரிய மாத வாடகையை செலுத்த வேண்டும். நகராட்சி குத்தகை கட்டிடங்களுக்கு மாத வாடகை செலுத்த தாமதிக்கும் ஒவ்வொரு மாதம் ஒன்றிற்கு 1.5 சதவீதம் குறையாமல் தண்டத் தொகை வசூல் செய்யப்படும்.

25. நகர்மன்றத்தால் குத்தகைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு முன்போ அல்லது பின்போ அல்லது கட்டிடத்தின் பகுதியிலோ அல்லது குத்தகைதாரர்களுக்கு நகர்மன்றத்தால் குத்தகைக்கு விடப்படும். குறிப்பிட்ட இடத்தில் பரப்பளவிற்கு அதிகமாகவோ கீத்துவாரங்கள், கொட்டகைகள் அல்லது எந்தவிதமான தளங்கள் போட்டு ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது. நகர்மன்றத்தால் குத்தகைக்கு விடப்பட்ட காலியிடத்திலோ கட்டிடத்திலோ குத்தகைதாரர் முன் அனுமதி பெறாமல் மாறுதல் செய்தோ அதிகப்படியான கட்டிடங்களைக் கட்டக்ககூடாது. அவ்விதம் கட்ட விரும்புபவர்கள் நகர்மன்ற அனுமதி பெற்ற பின்பே வேலைகளைச் செய்ய வேண்டும். முன் அனுமதி பெறாமல் செய்யப்படும் வேலைகள் முற்றிலுமாக தடை செய்யப்படும். அல்லது உரிமதாரரின் செலவில் இடித்து அகற்றப்படும். அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டும் மன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டும் அனுமதி வழங்கவோ அல்லது

மறுக்கவோ மன்றத்திற்கு உரிமை உண்டு. அப்படி அனுமதி பெற்றோ அல்லது பெறாமல் அனுபவிக்கும் அதிகப்படியான பரப்பளவிற்கு தனியாக மாதம் ஒன்றுக்கு சதுர மீட்டர் 1க்கு கட்டணம் நிர்ணயம் செய்து வசூல் செய்ய ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.

**26.** தொற்று நோய் (Epedemics) பரவாமலிருக்கும் பொருட்டு குத்தகைதாரர் இடங்களை சிறிது காலத்திற்கு மூடும்படி நேர்ந்தால் அந்தக் காலத்திற்காக குத்தகைதாரர்களுக்கு எவ்வித பொருள் ஈடும் கொடுக்கப்படமாட்டாது.

**27.** உரிமைதாரரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள குத்தகை இனங்களில் கடைகளில் உள்ள மின்சார இணைப்புகளை நகராட்சி மின் இணைப்பு மூலம் மின் விளக்குகள் உபயோகிப்பவர்கள் அல்லது மின்சாரத்தை பயன்படுத்துவோர்கள் மாதந்தோறும் உரிய கட்டணத்தை உரிய காலத்திற்குள் சம்பந்தப்பட்ட குத்தகைதாரர்கள் மின் கட்டணம் செலுத்த வேண்டும். குத்தகைதாரர்கள் மின் சிக்கனத்தை கருதி LED விளக்குகள் தவிர மற்ற விளக்குகளையோ அல்லது மற்ற மின்சாதனங்களையோ பயன்படுத்தல் கூடாது.

**28.** நகராட்சியில் உள்ள ஏலம் விடப்படும் இனங்களில் அதிக பட்ச குத்தகை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கேள்விக்கு 1 சதவீதம் தொகையை வருமான வரியாக நகராட்சி கருவூலத்தில் செலுத்த வேண்டும்.

**29.** குத்தகைக்கு எடுப்பவர் உயர்ந்த பட்ச ஏலத் தொகை அல்லது டென்டர் தொகையில் GST தொகை மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்படும் சதவீதத்திற்கு ஏற்ப நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட வேண்டும். கடைகளுக்கு வாடகைத் தொகையை மாதந்தோறும் 5ம் தேதிக்குள் நகராட்சிக்கு செலுத்த வேண்டும்.

**30.** குத்தகை இனம் கடைகள் மற்றும் காலியிடங்களுக்கு குத்தகைத் தொகையினை/ வாடகைத் தொகையை உரிய காலத்திற்குள் செலுத்த தவறும் பட்சத்தில் தாமதமாக செலுத்தும் வாடகைக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன்படி அபராதக் கட்டணமாக 18 சதவீதம் தொகையை குத்தகை / வாடகைத் தொகையுடன் சேர்த்து வசூல் செய்யப்படும்.

**31.** திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2016ன் கீழ் குத்தகைதாரர்கள் / கடை உரிமதாரர்கள் தங்கள் வளாகத்தில் உருவாகக்கூடிய மட்கும் குப்பை மற்றும் மட்காத குப்பைகளை தனித்தனியாக பிரிக்கப்பட வேண்டும்.

**32.** சந்தை மற்றும் ஹோட்டல் வைத்திருக்கும் உரிமதாரர்கள் மக்கும் குப்பைகளை தாங்கள் மேற்படி வளாகத்தில் உரமாக மாற்றிடும் செயல் திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும்.

**33.** மக்காத குப்பைகளை சேகரித்து வாரந்தோறும் வியாழக்கிழமை அன்று துப்புரவு பணியாளர் வசம் ஒப்படைக்க வேண்டும்.

**35.** தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட குத்தகைதாரர் மற்றும் கடை உரிமைதாரர்கள் மீது திடக்கழிவு மேலாண்மைச் சட்டம் 2016ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

**36.** மானாமதுரை நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016ன் 50 மைக்ரான்க்கு குறைவான தடிமன் உள்ள பிளாஸ்டிக் பொருட்கள் / பைகள் விற்பனை செய்யக்கூடாது. மீறினால் பிளாஸ்டிக் மேலாண்மை துணை விதிகளின்படி அபராதம் விதிக்கப்படும்.

**37.** நகராட்சியில் அனுமதி பெற்ற நுழைவுச் சீட்டு வரிசை எண்ணுடன் ஆணையர் கையொப்பம் பெற்று நுழைவு சீட்டினை பொதுமக்களுக்கு வழங்க வேண்டும். நுழைவு சீட்டில் உள்ள தொகையை மட்டுமே வசூலிக்க வேண்டும். கூடுதலாக வசூல் செய்யக் கூடாது. தவறினால் உரிமம் ரத்து செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| | **38.** மேலே சொல்லப்பட்ட பொதுக்கட்டுப்பாடுகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் சம்மந்தமாக சந்தேகம் ஏதும் இருந்தால் ஆணையரின் விளக்கமும் தீர்ப்புமே முடிவானதாகும். நிபந்தனைகளை மாற்றவோ கூட்டவோ ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.<br><br>**39.** அரசாணை நிலை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007ன்படி நகராட்சிக்குச் சொந்தமான கடைகளை, கடைகள் ஏலம் விடப்பட்ட/ ஒப்படைக்கப்பட்ட காலம் முதல் 9 ஆண்டுகள் மட்டுமே நடத்திக்கொள்ள உரிமையுண்டு. 9 ஆண்டு காலம் முடிவடைந்த பின்னர் மேற்படி கடைகள் நகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும் அல்லது கடை குத்தகைதாரர் நகராட்சி கடையை தொடர்ந்து நடத்த சம்மதம் தெரிவிக்கும்பட்சத்தில் வழிகாட்டுதல் மதிப்பின்படியான வாடகையையோ அல்லது அங்காடி மதிப்பின்படியான வாடகையையோ இதில் கூடுதலான தொகையை வாடகை தொகையாக நிர்ணயம் செய்து தரப்படும்.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br><br>1) மேற்கண்ட நிபந்தனைக்களுக்குட்பட்டு ஆணை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்கண்ட நிபந்தனைகளை சிவகங்கை மாவட்ட அரசிதழிலும் வெளியிடவும், அதற்கான தொகையினை நகராட்சி பொதுநிதியில் செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>(ந.க.எண்432 /2022/அ2) | |
| பொருள் 30 | மானாமதுரை நகராட்சியில் உள்ள 27 வார்டுகளிலும், தெருக்களிலும் நடுவில் இடையூராக இருக்கு மின்கம்பங்களை மாற்றி சரியான இடத்தில் அமைக்க ஆகும் செலவினை மின்சார வாரியத்திற்கு நகராட்சியின் பொதுநிதியில் இருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு. | தீர்மானம் எண் 67 அனுமதிக்கப்பட்டது |

**(ஒப்பம்) சோ.மாரியப்பன் கென்னடி,**
**நகர்மன்றத்தலைவர்,**
**மானாமதுரை நகராடசி.**